1972 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லாப் பொருள்களிலிருந்தும் சாராயம் காய்ச்ச முற்பட்டு விட்டால், பிறகு நமக்குத் தேவையான பொருள்கள் இல்லாமல் போய் விடும். எந்தெந்த அளவுக்கு எந்தெந்தப் பொருள்களில் மது உற்பத்தி செய்யலாம் என்று ஆராய்ந்து, அதற்குப் பிறகு தான், அந்த முடிவினை மேற்கொள்ள முடியும்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, கோவையிலே பழைய சாராய டிப்போ இருந்தது. அது மூடிக் கிடக்கிறது. மறுபடியும் அந்தச் சாராய டிப்போவைத் திறக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதன் திறப்பு விழா நடைபெறும் நன்னாளை—எதிர்பாருங்கள் (சிரிப்பு).

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, திருச்சியிலே இருக்கும் சாராயத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் சாராயம் மிகத் தர குறைவாக இருக்கிறது என்று குடித்தவர்கள், நான் சொல்லவில்லை, சொல்கிறார்கள். ஆகவே, அந்தத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்வதோடு, அந்தச் சாராயத் தொழிற்சாலையிலிருந்து விழும் கழிவு நீரை உய்யக் கொண்டான் வாய்க்காலில் விடாமல், அதிகமாக தண்ணீர் உள்ள காவிரியாற்றில் விடுவதற்கு அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு குறை போக வேண்டுமென்று முயற்சி எடுக்கிற நேரத்தில், இன்னொரு பெரும் குறை நாம் செய்துவிடக் கூடாது. ஆகவே, இது போன்ற கேள்விகளின் மூலம் நல்ல பயனை நாம் பெறமுடியாமல் போய்விடும். உய்யக்குண்டான் ஆற்றில் விடாமல், காவிரியாற்றில் விடுவதால் நாற்றம் பரவலாக்கப்படுமே தவிர, குறைந்து விடும் என்று கருத முடியாது. திருச்சியில் காய்ச்சும் சாராயம் தரம் பற்றிச் சொன்னார்கள். அது எந்தெந்தத் தரத்தில் இருக்க வேண்டுமென்று கோரிக்கை வந்தால் கவனிக்கப்படலாம்.

ஆபாசத் திரைப் படங்கள்

*767 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆபாசமான காட்சிப் படங்களை சினிமாக் கொட்டகைகளில் காட்டப்படுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : "தடையின்றி அனைவரும் காணுதற்குரிய" அல்லது "வயது வந்தோர் மட்டும்" காணுதற்குரிய திரைப் படங்களுக்கு, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தணிக்கை வாரியம் சான்றளிக்கிறது. சான்றிதழ் வழங்குவதற்கு முன், திரைப் படங்களில் வரும் காட்சிகளில் சில ஆபாசமாக உள்ளன என்று இவ் வாரியம் கருதினால் அக் காட்சிகளை, இவ்வாரியம் வெட்டிவிடுகிறது. இவ்வாரியத்தால் சான்றளிக்கப்பட்டு விட்ட திரைப்படங்களைத் திரையிடக் கூடாது என்று தடை விதிப்பதற்கு, மாநில அரசுக்கு அதிகாரம் எதுமில்லை. எனவே, ஆபாசப் படங்கள் திரையிடப்படுவதை இந்த அரசு தடை செய்வது குறித்து வினா எழவில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, முக்கியமான தலை நகரங்களில் இரவு ஒரு மணிக்கு மேலாக குறிப்பிட்டவர்களுக்கு என்று காட்டப்படுவதற்கு தகவல் சொல்லப்பட்டு ஆபாசப் படங்கள் நடைபெறுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதன் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது தணிக்கை செய்யப்படுகின்ற படங்களைப் பற்றிய கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது ரகசியமாக காட்டப்பட்டு பணம் வசூலிக்கப்படுகின்ற சில ஆபாசப் படக் காட்சியாகும். அப்படிப்பட்ட காட்சிகள் ஒன்று இரண்டு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் வழக்கு மன்றங்களில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, 18 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் பார்க்கக்கூடிய சில திரை அரங்குகளை ஏற்படுத்தி, அங்கே கல்வி, வீரம், பூகோளம், நாட்டுப் பற்று முதலியவைகளை உண்டாக்கக்கூடிய படங்களை மட்டும் காட்ட வேண்டும். மற்றவர்கள் பார்க்கக் கூடிய திரை அரங்குகளில் 18 வயதுக்குட்பட்டவர்கள் போக அனுமதிக்கப்படக் கூடாது என்ற முறையில் அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 18 வயது என்று நிர்ணயிப்பது கடினம். இப்பொழுது சிறுவர்கள், குழந்தைகள் பார்க்க அனுமதிக்கப்படாத படங்கள் என்ற அளவில் அடல்ஸ் ஒன்லி என்ற நிலைமையில் வரையறுக்கப்பட்டு, படங்கள் தணிகை செய்யப்படுகின்றன. 18 வயதுக்குட்பட்டவர்கள் படங்கள் பார்க்கக்கூடிய தியேட்டர் என்று வைத்தால், அதைப் போலவே 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் படம் பார்க்கக்கூடிய தனி தியேட்டர் வைக்கவேண்டியிருக்கும். இன்னென்ன வயது அளவுக்கு என்று தியேட்டர்களை வரையறுப்பது என்பது இயலாத காரியம்.

திரு. என். கிட்டப்பா : சினிமாப் படங்களை தணிக்கை செய்யக்கூடிய அதிகாரம் மத்திய அரசாங்கத்தினிடம் இருந்து வருகிறது. தமிழகத்தில் காட்டக் கூடிய படங்களையாவது தணிக்கை செய்கின்ற அதிகாரத்தை நமது அரசாங்கம் கேட்டுப் பெற்றால், அத்தகைய ஆபாசப் படங்களை அகற்றுவதற்கு வழி ஏற்படும். ஆகவே, அத்தகைய முயற்சி எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் கேட்கின்ற மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் என்ற பட்டியலிலே இதுவும் ஒன்று.

திரு. கோவை செழியன் : இங்கே ஆங்கிலப் படங்களில் முத்தக் காட்சிகள் வருகின்றன. அதனால் நிறையக் கூட்டம் அத்தகைய படங்களுக்குப் போகிறது. தமிழ்ப் படத்தை யாரும் பார்ப்பது இல்லை. கோஸ்லா கமிட்டி சிபார்சுப்படி தமிழ்ப் படங்களில் முத்தக் காட்சிகளை அனுமதிப்பதற்கு மத்திய அரசை இந்த அரசு அணுகுமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : போயும், போயும் மத்திய அரசிடத்தில் முத்தத்திற்காக ஒரு பரிந்துரை செய்வது என்பது அவ்வளவு சரியாக இருக்காது. தைவிட பல நல்ல காரியங்கள் நாட்டிற்குத் தேவையாக இருக்கின்றன. அவைகளுக்கு மத்திய அரசோடு வாதாடுவது நல்லது. நண்பர் கோவை செழியன் அவர்கள் இந்த முத்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடுவது நல்லது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆபாசம் என்பதற்கு தணிக்கைக் குழு அகில இந்தியாவுக்கும் ஒரே இலக்கணம் வைத்திருக்கிறதா? அல்லது, மாநிலத்திற்கு மாநிலம் அதன் கலாசாரம், பண்பாடு இதற்கேற்றவாறு படங்கள் தணிக்கை செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநிலத்திற்கு மாநிலத்திலுள்ள கலாசாரத்திற்கேற்றவாறு என்று சொல்லப்படுகிறது என்றாலும், இந்தியாவில் இருக்கின்ற வேறு மாநிலங்களிலுள்ள படங்கள் தமிழ் நாட்டில் அகில இந்திய ரீதியில் அனுமதிக்கப்படுகின்றன. ஆகவே, இந்திய ஒருமைப்பாடு, ஒரே நாடு என்கின்ற அளவில் படங்களைப் பொறுத்த வரையில் கலாசாரம் வேறுப்பட்டிருக்கிற காட்சிகளைப் பார்க்கிறோம். தமிழ் நாட்டிலிருந்து வருகிற படங்களைவிட வேறு பல மாநிலங்களிலிருந்து, வடக்கே இருந்து வருகிற பல படங்களில் எங்கெங்கே எது எது ஆபாசம் என்று கருதி சொல்லப்படுகிறதோ—ஆபாசமாக இருக்கிறதா, இல்லையா என்று நாம் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது—எதை ஆபாசம் என்று கருதுகிறோமோ அதைவிட அதிகமான ஆபாசக் காட்சிகள் இருப்பதை நாம் காண்கிறோம். அதற்காகத் தான் அந்தந்த மாநில அளவில் படங்களைத் தரமாக அமைப்பதற்குத் தணிக்கைக் குழுக்கள் மாநில அளவில் இருக்க வேண்டும் என்கின்ற கருத்தை நாம் பல ஆண்டுக் காலமாக வலியுறுத்தி வருகிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the standard of pictures is going down and this is happening not only in any particular language, but in all languages. The producers appear to produce low standard pictures in order to get more money. May I request the Hon. Chief Minister whether he will take the initiative to form a Committee on All-India basis to see that such low standard pictures are prohibited?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தரம் தாழ்ந்த படங்களைத் தயாரிப்பது பற்றி குழு அமைப்பதற்கு நாம் எந்த நடவடிக்கையும் மாநில அளவிலே எடுத்திட இயலாது. அதை மத்திய அரசு தான் எடுத்திட வேண்டும். இது போன்று கேள்விகள் மூலம் ஏற்படுகின்ற விளைவு மத்திய அரசின் காதில் எட்டும் என்று நான் நினைக்கிறேன்.

புலவர் சி. பழனிச்சாமி : அண்ணா சிலை அருகில் அரசாங்கத் தோட்ட வாசலில் ராஜா என்ற ஆபாச சினிமாவின் விளம்பரத்தைக் காகிதம் ஒட்டி மறைத்திருந்தார்கள். இப்பொழுது அதை எடுத்துவிட்டார்கள். ஆபாச விளம்பரம் அப்படியே இருக்கிறது. அந்த விளம்பரத்தை மீண்டும் அகற்ற நம் அரசு ஆவன செய்யுமா?